
# நீதான் எனது ஹீரோ

கோவிட்-19 எதிர்த்து
குழந்தைகளும்
போரிடுவது எப்படி!



IASC
Inter-Agency Standing Committee

## “நீதான் எனது ஹீரோ” நூல் உருவாக்கம்

அவசர காலத்தில் ஏற்படும் மனநல - உளவியல் அடிப்படையில்  முகமைகளுக்கு இடையேயான நிலைக்குழுவால் (Inter-Agency Standing Committee on Mental Health and Psychological support in Emergency Settings-IASC MHPSS RG) உருவாக்கப்பட்டது இந்த நூல். இந்தத் திட்டமானது, IASC MHPSS RGல் உறுப்பினர்களாக உள்ள சர்வதேச, பிராந்திய, தேசிய அளவிலான முகமைகளின் வல்லுநர்களாலும், 104 நாடுகளைச் சேர்ந்த பெற்றோர், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், ஆசிரியர்கள், குழந்தைகளின் உதவியுடனும் உருவாக்கப்பட்டுள்ளது. கோவிட்-19 பெருந்தொற்று பரவுகிற காலத்தில் குழந்தைகளின் மனநலம், உளவியல் தேவைகளை மதிப்பிடுவதற்காக அராபிக், ஆங்கிலம், இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் சர்வதேச அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.  இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கதையின் மூலமாக கோவிட்-19 தொடர்பான விஷயங்களை அணுக முயன்றுள்ளோம்.  இந்தக் கதையை மீளாய்வு செய்யவும் மேம்படுத்தவும் குழந்தைகள், பெற்றோர், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள் அளித்த கருத்துகள் பயன்படுத்தப்பட்டன.

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் குழந்தைகளை எவ்வாறு சமாளித்தோம் என்று உலகம் முழுவதிலும் உள்ள 1700-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெற்றோர், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் எங்களுடன் கருத்தைப் பகிர்ந்துகொண்டனர். எங்களது ஆய்வுகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதிலும் கதையின் உருவாக்கலில் அளப்பரிய தாக்கத்தையும் ஏற்படுத்திய இந்தக் குழந்தைகள், பெற்றோர், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், ஆசிரியர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். இந்தக் கதை உலகமெங்கும் உள்ள குழந்தைகளால் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டது.

இந்தக் கதையை எழுதியவரும் ஓவியங்களை வரைந்தவருமான ஹெலன் பாட்டுக்கின் பணியை IASC MHPSS RG  பாராட்டுகிறது.
©IASC, 2020.  இந்தப் பதிப்பானது Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 3.0 IGO உரிமம் (CC-BY-NC-SA 3.0 IGO; https://creativecommons.org/by-nc-sa/3.0/igo) ன் கீழ் அச்சிடப்பட்டது.

## அறிவிப்பு

இந்தத் தமிழ் மொழியாக்கம் 'முகமைகளுக்கு இடையேயான நிலைக்குழுவின்' (IASC) வழிகாட்டுதல்படி உருவாக்கப்பட்டது. என்றாலும் தமிழ் மொழியாக்கத்தின் துல்லியத்தன்மையைப் பொறுத்தவரை, ஆங்கில மூலமே அதிகாரப்பூர்வமானது.

'ஆங்கில மூல நூலான Inter-Agency Standing Committee. My Hero is You: How Kids Can Fight COVID-19! ஆனது CC BY-NC-SA 3.0 IGO எனும் உரிமத்துக்குக் கட்டுப்பட்டது'.

## அறிமுகம்

'நீதான் எனது ஹீரோ' எனும் நூல் கோவிட்-19 பெருந்தொற்றால் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

'நீதான் எனது ஹீரோ' நூலினை குழந்தைகள், குழந்தைகளின் குழுவுடன் இணைந்து பெற்றோரும் குழந்தைகளைப் பராமரிப்பவர்களும் ஆசிரியர்களும் கட்டாயமாக வாசிக்க வேண்டும். இந்த நூலை பெற்றோர், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், ஆசிரியர்கள் உதவியின்றி குழந்தைகள் மட்டும் தனியாக வாசிப்பதை ஊக்குவிக்கக் கூடாது. விரைவில் வெளியாகவுள்ள 'ஹீரோக்களுக்கான செயல்பாடுகள் (Actions for Heroes)' எனும் துணைக்கையேடு கோவிட்-19 தொடர்பான விஷயங்களை அணுகுவதற்குத் துணை நிற்கும். இது குழந்தைகளின் உணர்வையும் மனநிலையையும் கையாள உதவும். மேலும், இந்த நூலை அடிப்படையாகக்கொண்டே குழந்தைகளுக்கான துணைச்செயல்பாடுகள் அமையும்.



**தமிழில் - செம்மொழிமணி - புரட்சிக்கவி**
கே.கே.நகர். சென்னை-600078,

வாசித்து உறுதிபடுத்துபவர் ஆசிரியை திருமதி த.திருச்செல்வி
தேசிய வகை தமிழ்ப்பள்ளி லோபாக், சிரம்பான் .
ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் 22 வருடங்கள் அனுபவமிகு ஆசிரியர்.



# நீதான் எனது ஹீரோ

அம்மாதான் சாராவின் ஹீரோ. அவளைப் பொறுத்தவரையில் உலகிலேயே தலைசிறந்த அம்மாவும் விஞ்ஞானியும் அவளது அம்மாதான். ஆனாலும் சாராவின் அம்மாவாலும்கூட கரோனா வைரஸுக்கான மருந்தைக் கண்டறிய முடியவில்லை.

“கோவிட்-19  பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?” என்று தன் அம்மாவிடம் சாரா கேட்டாள்.

“கோவிட்-19 அல்லது கரோனா வைரஸ் மிக மிகச் சிறியது. அதை நம் வெறும் கண்களால் காண முடியாது”, என்றாள் அம்மா. உடல்நிலை சரியில்லாதவர்கள் இருமும்போதும் தும்மும்போதும் இது பரவுகிறது.. அவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களையோ அல்லது பொருட்களையோ தொடும்போதும் பரவுகிறது. உடல்நிலை சரியில்லாதவர்களுக்கு காய்ச்சலும் இருமலும் ஏற்படுகிறது. கூடவே, மூச்சுவிடுவதிலும் சிரமமும் உண்டாகிறது.

“நம்மால் காண முடியவில்லை என்றால்,  அதை எதிர்த்துப் போராட முடியாதல்லவா?” என சாரா கேட்டாள்.

“நம்மால் எதிர்த்துப் போராட முடியும். அதனால்தான் உன்னைப் பாதுகாப்பாக இருக்கச் சொல்கிறேன் சாரா. இந்த வைரஸ் பலதரப்பட்ட மக்களையும் பாதிக்கிறது.



ஒவ்வொருவரும் இதை எதிர்த்துப் போரிடுவதற்கு நாம் உதவ முடியும். குழந்தைகள் சிறப்பானவர்கள். அவர்களாலும் உதவ முடியும். நம் எல்லோருக்காகவும் நீ பாதுகாப்பாக இருக்க வேண்டும். எனது ஹீரோவாக நீ இருக்க வேண்டும்", எனக் கூறினார் அம்மா.

அன்றிரவு சாரா படுக்கையில் படுத்திருந்தாள். அவளால் தன்னை ஹீரோவாக உணரமுடியவில்லை. அவள் வருத்த மடைந்திருந்தாள். அவள் பள்ளிக்கு செல்ல விரும்பினாள். ஆனால், பள்ளிக்கூடமோ மூடப்பட்டிருந்தது. தனது நண்பர் களைக் காணத் துடித்தாள். ஆனால் அது பாதுகாப்பானது அல்ல. தனது உலகத்தை கரோனா வைரஸ் பயமுறுத்துவதை நிறுத்த வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

"ஹீரோக்களிடம் அதீத ஆற்றல் இருக்கிறது. என்னிடத்தில் என்ன இருக்கிறது?", என்று தனக்குத்தானே சொல்லிக கொண்டே தூங்குவதற்காக அவள் கண்களை மூடினாள்.

திடீரென்று இருட்டில் ஏதோ ஒரு குரல் அவளது பெயரை மெல்லமாகச் சொல்லி அழைத்தது.

"யார் அது?", என்று சாரா திடுக்கிட்டாள்.

"ஹீரோவாக ஆவதற்கு உனக்கு என்னவெல்லாம் வேண்டும் சாரா", என்று கேட்டது அந்தக் குரல்.

"உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்வது எப்படி என்று சொல்வதற்கு ஒரு வழி வேண்டும். அதன்படி அவர்களால் ஒவ்வொரு வரையும் பாதுகாக்க முடியும்", என்றாள் சாரா.





“அப்படியென்றால் நான் என்னவாக இருக்க வேண்டும்?”, என்று கேட்டது அந்தக் குரல்.

“பறக்கக்கூடியதாக, உரக்கப் பேசக்கூடியதாக, உதவி செய்யக்கூடியதாக அது இருக்க வேண்டும்.”

வூஷ்ஷ்ஷ்... என்ற சத்தத்துடன் நிலவு வெளிச்சத்தில் ஏதோவொன்று தெரிந்தது.

“யார் நீ?”, என்று ஆச்சரியத்தில் கேட்டாள் சாரா.

“நான் ஏரியோ”, என்றது அது.
“இதற்கு முன்னர் உன்னை நான் பார்த்ததேயில்லையே”, என்றாள் சாரா.

“ஆம். எப்போதும் நான் இங்குதான் இருக்கிறேன். உன் மனதிலிருந்து நான் தோன்றினேன்”, என்றது ஏரியோ.

“என்னுடன் நீ இருந்தால், உலகெங்குமுள்ள குழந்தைகளிடம் கரோனா வைரஸ் குறித்து சொல்ல முடியும். என்னால் ஹீரோ ஆக முடியும்! ஆனால் எங்கெங்கும் கரோனா வைரஸ் பரவியிருக்கும்போது பயணம் செய்வது பாதுகாப்பானதா, ஏரியோ?” என சாரா கேட்டாள்.

“சாரா என்னுடன் மட்டும் நீ இரு. நாம் ஒன்றாக இருக்கும்போது, உன்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது,” என்றது ஏரியோ.






ஏரியோவின் முதுகில் தாவிக்கொண்டாள் சாரா. அவர்கள் இருவரும் அவளது படுக்கையறை சன்னல் வழியே இரவு வானத்துக்குள் உயரப் பறந்தனர். நட்சத்திரங்களை நோக்கி சென்றனர். நிலவிற்கு ‘ஹலோ’ சொன்னார்கள்.

சூரியன் உதித்தபோது, பிரமிடுகள் சூழ்ந்திருந்த அழகிய பாலைவனத்தில் அவர்கள் தரையிறங்கினர். அங்கு சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் பிரமிப்பில் உரக்கக் கத்திக்கொண்டே சாராவையும் ஏரியோவையும் நோக்கிக் கையசைத்தனர்.

“வாங்க வாங்க! என் பெயர் சலீம். நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? மன்னித்துக்கொள்ளுங்கள். நாம் அருகில் நெருங்கி நிற்கக் கூடாது. குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளியாவது தேவை”, என்று ஒரு சிறுவன் கூறினான்.

“அதனால்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்! என் பெயர் சாரா. இது ஏரியோ. உங்களுடைய அண்டை வீட்டினர், நண்பர்கள், பெற்றோர்கள், தாத்தா பாட்டிகளை கரோனா வைரஸிலிருந்து குழந்தைகளால் பாதுகாப்பாக வைத்துகொள்ள முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? நாம் அனைவரும் செய்ய வேண்டியது என்னவென்றால்....” என்றாள் சாரா.

“நமது கைகளை சோப்பு - தண்ணீரைக் கொண்டு கழுவுவதுதான்”, என்று மெல்லிய புன்னகையுடன் அவள் சொல்லத் தொடங்கியதை முடித்துவைத்தான் சலீம். “தெரியும் சாரா. உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது இருமல் வந்தால், நமது கைகளை மடக்கி முழங்கைக்குள் இரும வேண்டும். ஒருவருக்கொருவர் கைகொடுத்துக்கொள்வதற்குப் பதிலாக கையசைத்து வரவேற்கலாம். நாம் வீட்டிற்குள்ளேயே இருந்துகொள்ள முயற்சிப்போம். என்றாலும் நாம் வாழ்வது மிகவும் நெரிசல் மிகுந்த நகரம். அதனால் எல்லோராலும் வீட்டிற்குள் இருக்க முடிவதில்லை.



“ம்ம்ம், என்னால் இதற்கு உதவிசெய்ய முடியும். அவர்களால் கரோனா வைரஸைக் காண இயலாது. ஆனால் என்னைக் காண முடியும்! என் மீது தாவி ஏறுங்கள். ஆனால், எனது இரண்டு சிறகுகளின் மீது அமருங்கள். அவை இரண்டுக்கும் இடையே ஒரு மீட்டர் இடைவெளியாவது இருக்கும்”, என்றது ஏரியோ.

தன்னுடைய சிறகுகளின் மீது சலீமையும் சாராவையும் ஏற்றிக கொண்டு வானில் பறந்தது ஏரியோ. உரக்க உறுமிக்கொண்டும், பாடிக் கொண்டும் நகரங்களுக்கு மேலே அது பறந்தது!

“நாம் வீட்டிற்குள் இருப்பது பாதுகாப்பானது என்று உங்களுடைய குடும்பத்தினரிடம் சொல்லுங்கள்! வீட்டில் இருப்பதன் மூலம் ஒருவரையொருவர் பத்திரமாக பாதுகாத்துக்கொள்ள முடியும்!” என்று தெருவில் விளையாடிய குழந்தைகளை நோக்கிக் கத்தினான் சலீம்.

மக்கள் வியப்புடன் பார்த்தனர். அவர்கள் அவனுக்குக் கையசைத்துக்கொண்டே வீட்டிற்குள் செல்ல சம்மதித்தனர்.





வானில் உயரப் பறந்தது ஏரியோ.
உற்சாகத்தில் கத்தினான் சலீம்.
வானில் பறந்து கொண்டிருந்த
விமானத்தில்  உள்ள பயணிகள்
இவர்களை பிரமிப்புடன்
பார்த்தனர்.

“மக்கள் பயணம் செய்வதை
இப்போதைக்கு மட்டுமாவது
நிறுத்திக்கொள்ள வேண்டும்.
உலகெங்கிலும் நாடுகளின்
எல்லைகளை மூடுகின்றனர்.
அதனால் நாம் இருக்கும்
இடத்திலேயே, நமது
அன்புக்குரியவர்களுடன்
பத்திரமாக இருக்க வேண்டும்”,
என்று சலீம் கூறினான்.

“பல விஷயங்கள் மாறியிருப்பதாக
நான் உணர்கிறேன். சில நேரம்
அதை நினைத்து எனக்கு பயமாகவும்
இருக்கிறது”, என்றாள் சாரா.

“சில விஷயங்கள் மாறும்போது பயமாகவும் குழப்பமாகவும் இருக்கும்
சாரா. எனக்கு பயமாக இருக்கும்போது நான் மெதுவாக மூச்சை
இழுத்து நெருப்பை கக்குவேன்”, என்றது ஏரியோ.

ஏரியோ நெருப்பைக் கக்கியது.

“நீங்கள் பதற்றமாக இருக்கும்போது அமைதியடைவதற்கு
என்ன செய்வீர்கள்?” என ஏரியோ அவர்களிடம் கேட்டது.



“யாருடன் இருக்கும்போது பாதுகாப்பாக உணர்வேனோ, அவர்களை நினைத்துக்கொள்வேன்”, என்றாள் சாரா.

“நானும்கூட அப்படித்தான். என் தாத்தா, பாட்டிபோல் நான் பாதுகாப்பாக உணர்வதற்கு உதவிசெய்யும் ஒவ்வொருவரையும் நினைத்துக்கொள்வேன். நான் அவர்களை பார்க்க வேண்டுமெனத் தவிக்கிறேன். நான் அவர்களை கட்டிப்பிடிக்க முடியாது. ஒரு வேளை அப்படிச் செய்தால் என் மூலமாக அவர்களுக்கும் கரோனா பரவுவதற்கு சாத்தியம் உண்டு. நாங்கள் ஒவ்வொரு வார விடுமுறை நாட்களிலும் அவர்களைப் பார்க்கச் செல்வோம். ஆனால், இப்போது முடியாது. ஏனென்றால் அவர்கள் பத்திரமாக இருந்தாக வேண்டும்”, என்றான் சலீம்.

“அவர்களுடன் தொலைபேசியில் பேசலாமா?” என்று சலீமிடம் கேட்டாள் சாரா.

“ஓ, பேசலாமே! அவர்கள் நாள்தோறும் என்னுடன் தொலைபேசியில் பேசுவார்கள். நாங்கள் வீட்டில் செய்யும் எல்லா வேலைகளைப் பற்றியும் அவர்களிடம் நான் சொல்வேன். அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அவர்களுக்கும் மகிழ்ச்சி தரும்”, என்றான் சலீம்.

“இப்போது நமக்குப் பிடித்தமானவர்களை நம்மால் பார்க்க முடியாது என்பதால், நாம் அவர்களை பார்க்க வேண்டுமென்று தவிப்பது இயல்புதான். அவர்களின் மீது நாம் எவ்வளவு அக்கறையுடன் இருக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது. மற்ற ஹீரோக்களையும் பார்ப்பது மகிழ்ச்சி தருமா?” எனக் கேட்டது ஏரியோ.

“நிச்சயமாக”, என சாராவும் சலீமும் சேர்ந்து கத்தினார்கள்.
“சிறப்பு. என்னுடைய தோழி சாஷா ஒரு சிறப்பு அதீத ஆற்றலைக் கொண்டிருக்கிறாள். வாருங்கள் போகலாம்!” என ஏரியோ கூறியது.





அவர்கள் பூமியை நோக்கிப் பயணித்தனர். சிறு கிராமம் ஒன்றில் தரையிறங்கினர். ஒரு சிறுமி அவளுடைய வீட்டிற்கு வெளியே பூப்பறித்துக்கொண்டிருந்தாள். ஏரியோவையும் அதன் சிறகுகளில் அமர்ந்திருந்த குழந்தைகளைப் பார்த்துச் சிறுமி சிரித்தாள்.

“ஏரியோ” எனக் கத்தினாள். “குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளியில் நாம் இருக்க வேண்டும். அதனால் என்னுடைய அரவணைப்பை உனக்குத் தூக்கி வீசுகிறேன்! நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்?”

“நான் உன்னுடைய அரவணைப்பைப் பெற்றுக்கொண்டேன் சாஷா. இப்படி வார்த்தைகள் மூலமாகவும் செயல்பாடுகள் மூலமாகவும் அக்கறையை வெளிப்படுத்திக்கொள்வது எனக்கு பிடித்திருக்கிறது. உன்னுடைய அதீத ஆற்றலை என் நண்பர்களும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்”.

“எது என்னுடைய அதீத ஆற்றல்?” எனக் கேட்டாள் சாஷா.

“உன்னுடைய குடும்பத்தில் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதிலிருந்து, நீ பிறருக்கு கரோனா வைரஸை பரப்பாமல் இருப்பதற்காக வீட்டிற்குள்ளேயே இருக்கிறாய் அல்லவா?” என்று கேட்டது ஏரியோ.

“ஆமாம். என்னுடைய அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அவர் முழுவதும் குணமடையும்வரை தன்னுடைய அறையிலேயே இருப்பார்” என்றாள் சாஷா.



“அது ஒன்றும் கஷ்டமாக இல்லை. வீட்டிலுள்ள மற்றவர்கள் ஒன்றாக விளையாடுவோம், சமைப்போம், தோட்டத்தில் நேரத்தைசெலவழிப்போம், ஒன்றாகச் சாப்பிடுவோம். என்னுடைய சகோதரர்களும் நானும் கால் விரல்களைத் தொட்டு நடனம் ஆடுவோம். நாங்கள் புத்தகம் வாசிப்போம். சில வேளைகளில் பள்ளிக்கூட நினைப்பு வந்துவிடுவதால், படிக்கவும் செய்கிறேன். ஆரம்பத்தில் வீட்டிற்குள்ளேயே இருப்பது ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. இப்போது அது பழகிவிட்டது.”

“அது அவ்வளவு எளிதான விஷயமில்லை சாஷா. வீட்டில் நீ மகிழ்ச்சியாக இருக்கவும் உனக்குப் பிடித்தமானவர்களுடன் பொழுதை கழிக்கவும் தெரிந்துகொண்டிருக்கிறாய். அதுதான் உன்னை என்னுடைய ஹீரோவாக ஆக்குகிறது”, என்றது ஏரியோ.

“குடும்பத்தினருடன் எப்போதாவது நீ சண்டை போட்டிருக்கிறாயா?” என சலீம் கேட்டான்.

“சில நேரம் சண்டை போட்டுக்கொள்வோம். நாம் மிகுந்த பொறுமை யுடனும் கூடுதல் புரிதலுடனும் இருக்க வேண்டும். தவறு செய்தால் உடனே மன்னிப்பு கேட்கவும் நமக்கு தெரிந்திருக்க வேண்டும். அதுதான் உண்மையான அதீத ஆற்றல். அதுதான் நம்மையும் மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும். சிறிது நேரம் தனிமையில் இருக்கவும் செய்வேன். நானாகவே ஆடவும் பாடவும் செய்வேன். அது எனக்கு மிகவும் பிடிக்கும். சில நேரம் என்னுடைய நண்பர்களையும் தொலைபேசியில் அழைத்துப் பேசுவேன்.....”, என்றாள் சாஷா.

“ஆனால் ஏரியோ, வீட்டைவிட்டு ரொம்பத் தொலைவில் இருப்பவர்கள் அல்லது வீடே இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்?” எனக் கேட்டாள் சாரா.







“இது சரியான கேள்வி, சாரா.  வாருங்கள் புறப்படுவோம். தேடிக் கண்டுபிடிப்போம்”,  என்றது ஏரியோ.

சாஷாவிடம் விடைபெற்றுக்கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள். கடலினால் சூழப்பட்டிருந்த தீவில் இறங்கியபோது கதகதப்பான காற்று வீசத் தொடங்கியது.



அங்கு மக்கள் நிறைந்த முகாமை அவர்கள் பார்த்தனர்.

ஒரு சிறுமி அவர்களைக் கண்டு தொலைவிலிருந்து கையசைத்தாள்.

“ஹாய் ஏரியோ, மீண்டும் உன்னைக் கண்டதில் மகிழ்ச்சி. ஒரு மீட்டர் இடைவெளியை நாங்கள் பின்பற்றுகிறோம். அதனால் இங்கிருந்தபடியே உன்னிடம் பேசுகிறேன். உன்னுடைய நண்பர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. என்னுடைய பெயர் லீலா”, என்றாள் அவள்.

“ஹாய் லீலா! என் பெயர் சாரா. இது சலீம். நீ கூறுவதைப் பார்த்தால் கொரோனா வைரஸிடமிருந்து உன்னை தற்காத்துக்கொள்கிறாய் எனத் தெரிகிறது. வேறு என்னவெல்லாம் செய்கிறாய்?”, எனக் கேட்டாள் சாரா.

“நாங்கள் எங்களது கைகளை சோப்பும் தண்ணீரும் கொண்டு கழுவுகிறோம்” என பதிலளித்தாள் லீலா.

“இருமும்போது கையை மடக்கி முழங்கையால் மூடிக்கொள்கிறாயா?” என சலீம் கேட்டான்.

“எப்படி என்று எங்களுக்கு செய்து காட்டுகிறாயா?” எனக் கேட்டாள் லீலா. அவர்களிடம் சலீம் செய்து காட்டினான்.
“நாங்கள் தைரியமாக இருக்க முயற்சிக்கிறோம், ஆனால் ஒன்றை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது. அதைப் பற்றி நான் உங்களிடம் சொல்லலாமா? யாரோ ஒருவர் உடல்நலமின்றி இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டதிலிருந்து மிகவும் பயமாக இருக்கிறது. அது உண்மையா? கரோனா வைரஸ் வந்தால் இறந்து விடுவோமா?” எனக் கேட்டாள் லீலா.



ஏரியோ பெருமூச்சு விட்டது. அதிகளவிலான இடத்தை அடைத்துக்கொண்டு தரையில் அமர்ந்தது.

“ஆமாம், குட்டி ஹீரோக்களே. அது எதிர்பாராதது. சிலர் நன்றாகவே இருப்பார்கள். சிலருக்கு உடல் நலக்குறைவு தீவிரமடையும். சிலர் இறக்க நேரிடும். அதனால்தான் முதியவர்களையும் நோயாளிகளையும் நாம் அதிக அக்கறையுடன் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அவர்கள்தாம்  அதிக பாதிப்பிற்கு உள்ளாக நேரிடும். இதுபோன்ற சில வேளைகளில் பயப்படும்போதும் பாதுகாப்பின்மையை உணரும்போதும், நம் மனதிற்குள் பாதுகாப்பான இடத்தை கற்பனை செய்துபார்க்க வேண்டும். என்னுடன் சேர்ந்து அதை செய்து பார்க்கிறீர்களா?” என்று கேட்டது ஏரியோ.

அவர்கள் அனைவரும் ‘நிச்சயமாக’ என்றனர். மேலும், ஏரியோ குழந்தைகளிடம், கண்களை மூடி அவர்கள் பாதுகாப்பாக உணரும் இடங்களை கற்பனை செய்துகொள்ளுமாறுக் கேட்டுக்கொண்டது.

“நீங்கள் பாதுகாப்பாக உணர்ந்த நேரத்தையோ அல்லது நினைவையோ மனதில் நிறுத்துங்கள்” என்றது ஏரியோ.

அந்த பாதுகாப்பான இடத்தில் அவர்களால் எதைப் பார்க்க முடிந்தது, எதை உணரமுடிந்தது, எதை முகர்ந்துபார்க்க முடிந்தது என ஏரியோ கேட்டது. அவர்களுக்கு பிடித்தமானவர்கள் யாரையேனும் பாதுகாப்பான இடத்திற்கு அழைப்பார்களா? அவர்களுடன் என்ன பேசிக்கொள்வார்கள் என்றெல்லாம் அது கேட்டது.

“எப்போதெல்லாம் பயமாகவும் சோகமாகவும் உணர்கிறீர்களோ, அப்போதெல்லாம் உங்களுடைய பாதுகாப்பான இடத்திற்கு நீங்கள் செல்லலாம். இதுதான் உங்களுடைய அதீத ஆற்றல். இதை உங்களுடைய குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் பகிர்ந்துகொள்ளலாம். நான் உங்கள் மீது அக்கறை கொண்டுள்ளேன்.



ஏன் இன்னும் பலரும் கூட உங்கள் மீது அக்கறையாக இருக்கிறார்கள். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதுவும் உதவிடும்", என்றது ஏரியோ.

"நம்மால் நம்மை பாதுகாத்துக்கொள்ள  முடியும்", என்றாள் லீலா.

"மிகவும் சரி, லீலா. நாம் எங்கிருந்தாலும் ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்ட  முடியும். எங்களுடைய பயணத்தில் நீயும் பங்கேற்க விரும்புகிறாயா?"

ஏரியோவுடனும் தனது புதிய நண்பர்களுடனும் பயணம் செய்ய முடிவெடுத்தாள் லீலா. தங்களுடன் லீலாவும் இணைந்துகொண்டதில் சாராவுக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால், சில நேரம் மற்றவருடைய துணை நமக்குத் தேவை என்பது அவளுக்குத் தெரியும். அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளாமலேயே பறந்தனர். தனது புதிய நண்பர்கள் தன் மீது அக்கறையுடன் உள்ளனர் என்பதும் லீலாவுக்குத் தெரியும்.




பனிபடர்ந்த மலையொன்று மெல்லத் தெரிய ஆரம்பித்தது. ஒரு சிறு நகரத்தில் ஏரியோ தரையிறங்கியது. அங்குள்ள ஒரு ஓடையில் சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். அங்கிருந்தவர்களில் ஒருவன் கையசைத்துக்கொண்டே “ஏரியோ” என்று கத்தினான்.

“ஹலோ கிம்”, என்றான் ஏரியோ.

“கரோனா வைரஸின் பாதிப்பிலிருந்து மீண்ட எனது நண்பர்களை நீங்கள் பார்க்க வேண்டுமென நான் விரும்புகிறேன்”, என்று தன்னுடன் வந்தவர்களிடம் கூறியது ஏரியோ.

“அது எப்படி இருந்தது?” என்று கேட்டான் சலீம். “நான் இருமிக்கொண்டே இருந்தேன். சில நேரம் அதிக காய்ச்சலும் இருந்தது. நான் மிகவும் சோர்வடைந்திருந்தேன். அடுத்த சில நாட்களுக்கு விளையாடுவதைக்கூட நான் விரும்பவில்லை. நீண்ட நேரம் தூங்கினேன். எனது குடும்பத்தினர் என்னைப் பத்திரமாக பார்த்துக் கொண்டார்கள். குடும்பத்தில் சிலர் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருந்தது. செவிலியர்களும் மருத்துவர்களும் அவர்களிடம் அன்புடன் நடந்துகொண்டனர். வீட்டில் இருந்த எங்களுக்கு அக்கம்பக்கத்தினர் உதவினர். சில வாரங்களுக்குப் பின்னர் நாங்கள் மீண்டு எழுந்தோம்”, என்றான் கிம்.



“நான் கிம்மினுடைய நண்பன். கிம்மிற்கு கொரோனா வைரஸ் வந்ததால் நண்பர்களாக இருப்பதை நாங்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. என்னால் அவனைப் பார்க்க முடியாவிட்டாலும்கூட, அவன் மீது அக்கறை செலுத்துவதை நான் ஒருபோதும் நிறுத்தவில்லை. மீண்டும் நாங்கள் இணைந்து விளையாடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்”, என்றான் இன்னொரு சிறுவன்.

“சில வேளைகளில் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொள்வதே நண்பர்களாக இருப்பவர்கள் செய்யக் கூடிய மிக முக்கியமான காரியம். அது சிறிது காலம் ஒருவரிடமிருந்து மற்றொருவர் விலகியிருப்பதாக இருந்தாலும் சரி”, என்றது ஏரியோ.



“மற்றவர்களுக்காக இது போன்ற விஷயங்களை நாம் செய்யலாம்”, என்றாள் லீலா.

“முன்புபோல் மீண்டும் ஒருநாள், நாம் எல்லோரும் இணைந்து விளையாடலாம். மீண்டும் பள்ளிக்குச் செல்லலாம்”, என்றான் சலீம்.

வீட்டுக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. தனது புதிய நண்பர்களிடம் சாரா விடைபெற்றுக்கொள்ள வேண்டிய நேரமிது. அனைவரும் ஒன்றாக இணைந்து மேற்கொண்ட சாகசப் பயணத்தை ஒருபோதும் மறக்க மாட்டோம் என்று ஒருவருக்கொருவர் உறுதியளித்துக்கொண்டனர்.

சிறிது காலத்துக்கு ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள முடியாது என்பதால் சாரா வருத்தமடைந்தாள். ஆனாலும் கிம்மின் நண்பன் சொன்னதை நினைத்து தன்னை அவள் தேற்றிக்கொண்டாள். மனிதர்களை காண முடியாததால், அவர்கள் மீது நாம் அன்பு செலுத்துவது தடைபடும் என்று அர்த்தமல்ல.



ஏரியோ எல்லோரையும் அவரவர் வீட்டில் இறக்கி விட்டது. சாரா தூங்குவதற்காக காத்திருந்தது.

“நாளையும் இதே மாதிரி செய்யலாமா?” என்று ஏரியோவிடம் கேட்டது சாரா.

“இல்லை சாரா. உன் குடும்பத்துடன் நீ இருக்கவேண்டிய நேரம் இது. நமது கதைகளை நினைவுபடுத்திக்கொள். உனது கைகளைக் கழுவுவதன் மூலமும் வீட்டிலேயே இருப்பதன் மூலமும் உனக்குப் பிடித்தவர்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியும். நான் ஒருபோதும் உன்னைவிட்டு விலகியிருக்க மாட்டேன். உனது பாதுகாப்பான இடத்திற்கு நீ செல்லும் போதெல்லாம், என்னுடன் நீ இருக்க முடியும்”, என்றான் ஏரியோ.

“நீதான் எனது ஹீரோ”, என்றாள் மெல்லிய குரலில்.

“நீயும் என் ஹீரோதான் சாரா. உன் மீது அன்பு வைத்துள்ள அனைவருக்கும் நீதான் ஹீரோ”, என்றது அது.



சாரா கண்ணயர்ந்தாள். அடுத்த நாள் அவள் கண் விழித்தபோது ஏரியோ புறப்பட்டிருந்தது. அதனால் அவனுடன் பேசுவதற்காக அவளுடைய பாதுகாப்பான இடத்திற்கு சென்றாள். அவள் தங்களது சாகசப் பயணத்தில் கண்டதையும் புதிதாகக் கற்றுக்கொண்டதையும் ஒன்றுவிடாமல் ஓவியமாக வரைந்தாள். அந்தத் தகவலை தன் அம்மாவிடம் சொல்வதற்காக ஓவியங்களை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

“மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு நம் எல்லோராலும் உதவ முடியும் அம்மா. எனது சாகசப் பயணத்தில் நிறைய ஹீரோக்களை நான் சந்தித்தேன்”, என்று அவள் கூறினாள்.

“செல்லமே, நீ சொல்வது ரொம்பச் சரி! மிகச் சிறந்த மருத்துவர்கள், செவிலியர்களைப் போன்று கரோனா வைரஸில் இருந்து மக்களை பாதுகாக்கக்கூடிய நிறைய ஹீரோக்கள் உள்ளனர். ஆனால் ஒவ்வொரு நாளும் நாம் எல்லோருமே ஹீரோக்களாக இருக்க முடியும் என்று நீ எனக்குப் புரியவைத்துவிட்டாய். எனது மிகப் பெரிய ஹீரோ நீதான்” என்றார் அவளது அம்மா.



